(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO. 80/2021 PW 1

Name சந்திரன்

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

01.09.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

ராஜேந்திரன் எனது தம்பி. ரங்கநாயகி எனது மற்றொரு சகோதரரான சண்முகம் என்பவரின் மனைவி. சுமதி மற்றும் ஜெயகுமார் சண்முகத்தின் மகள் மற்றும் மகன். 5 மற்றும் 6ம் பிரதிவாதிகள் எனது சகோதரிகள். தாவா சொத்துக்கள் கூட்டு குடும்பமாக நாங்கள் இருந்த சமயத்தில் எனது தகப்பனார் வாங்கியதாகும். நாங்கள் அனைவரும் சேர்ந்து தாவா சொத்துக்களை வாங்கினோம். எப்போது வாங்கினோம் என்று ஞாபகமில்லை. வாதசாஆ 1 உயில் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. யாரிடம் உள்ளது என்கின்ற விவரம் எனது வாதுரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கொடுத்த சொத்தை ஏற்றுக்கொண்டு அதை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் வேடங்கி நல்லூர், சிறுவானுர் ஊரில் உள்ள சொத்தை 8.35 ஏக்கர் எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி ராஜேந்திரனுக்கு 6.43 ஏக்கர் சொத்துக்கள் கொடுக்கபட்டது என்றால் சரிதான். இறந்து போன சண்முகத்திற்கு 5.87 ஏக்கர் சொத்துக்கள் மட்டும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஐந்து மற்றும் ஆறாம் நல்ல நிலமையில் இருப்பதால் அவர்களுக்கு சொத்து கொடுக்கபடவில்லை என்று வாதசாஆ 1 உயிலில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு மட்டும் 2 ஏக்கர் அதிகமான நிலம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வேடங்கி நல்லூர் கிராமத்தில் உள்ள சொத்தில் 1 ஏக்கர் 60 சென்ட் நிலத்தை எனது தகப்பனார்

தனக்காக நிறுத்திக்கொண்டார் என்றால் சரிதான். 2006ல் என் தகப்பனார இறந்துவிட்டார். 2011ல் எனது தாயார் காலமாகிவிட்டார். 1 ஏக்கர் 60 சென்ட் நிலத்தை என் தாயார் காலமான பிறகு நாங்கள் மூன்று பேர் சேர்ந்து அனுபவித்து வருகிறோம். எனது மகன் படித்து வாதசாஆ 1 உயிலில் உள்ள விவரத்தை என்னிடம் கூறினார். எனவே உயிலில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியும். உயிலில் என் தகப்பனார் சொத்துக்கள் தான் சுயமாக சம்பாதித்தது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். உயிலில் உயில் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதசாஆ 5 மற்றும் 6 கிரையபத்திரங்கள் 1977 மற்றும் 1976ல் ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரிதான். சுமார் 30 ஆண்டுகள் ஆனபிறகு தான் வாதசாஆ 1 உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ 5 மற்றும் 6 கிரைய பத்திரங்களில் உள்ள சொத்துக்கள் என் தகப்பனார் சம்பாதித்ததாக வாதசாஆ 1 உயிலில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே அந்த சொத்துக்கள் என் தகப்பனார் சம்பாதித்து வாங்கியதாக இருந்தால் உயிலில் அந்த சொத்துக்கள் குறித்து சொல்லப்பட்டிருக்கும் என்றால் அவை உயிலில் விடுப்பட்டு போய்விட்டது. என் தகப்பனார் அதை எழுதாமல் மறந்துவிட்டார். உயிலின் நகல் எப்போது என் வசம் கொடுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே வாதசாஆ 1 உயில் பற்றி விவரம் எனக்கு தெரியும். ஆக வழக்கு போடுவதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பே உயில் பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் தகப்பனாரிடம் ஏன் வாதசாஆ 5 மற்றும் 6 ஆவணங்களுக்குரிய சொத்துக்களை உயிலில் சேர்க்கவில்லை என்று நான் கேட்கவில்லை. என் தகப்பனார் இறந்த சமயத்தில் ஆவணங்களை பிரித்து கொண்டோம் அவ்வாறு பிரித்த சமயத்தில் வாதசாஆ 5 மற்றும் 6 ஆவணங்கள் என்னிடம் கொடுத்தார்கள். 1ம் பிரதிவாதி ராஜேந்திரன் சொத்துக்களை பிரித்துகொடுக்க அந்த ஆவணங்கள் வேண்டும் என்று கேட்டார்.

பாகப்பிரிவினை செய்ய ராஜேந்திரன் தான் என்னிடம் கேட்டார். நான் வாதசாஆ 5 மற்றும் 6 அசல் ஆவணங்களை எனது மகன் சொல்லியும் கேட்காமல் நான் ராஜேந்திரனிடம் கொடுத்துவிட்டேன். ஏ்ப்போது அசல் ஆவணத்தை கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை.